**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**OS.No : 133/2019** நாள் 25.08.2025.

**பி.வாசா.1, திரு.லட்சுமணன்**

**இடைமனு எண்கள்.13/2025 முதல் இடைமனு எண்.15/2025 வரையிலானவை அனுமதிக்கப்பட்டு மற்றும் இடைமனு எண்கள் 10/2025 முதல் இடைமனு எண.12/2025 வரை அனுமதிக்கப்பட்ட நிலையில் பிவாசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் தற்பொழுது மதுரையில் குடியிருக்கிறேன். நான் பொறியாளராக வேலை பார்த்தேன். வாதிகள் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று கேட்டால் என் அப்பா எனக்கு கொடுத்திருந்த சொத்தில் பாதி பங்கு கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். என் அப்பாவும் அவருடைய உடன்பிறந்தவர்களும் 1967 ம் ஆண்டு என் பாட்டி பொன்னமாளுக்கு சொந்தமான சொத்தை அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்கள். இந்த வழக்கிடை சொத்துக்கள் எந்தெந்த கிராமத்தில் உள்ளது என்று சொன்னால் கடம்பன் குளம் கிராமம், சமுசிகாபுரம் கிராமம், புதுப்பாளையம் கிராமம், தெற்கு வெங்காநல்லூர் கிராமம், ஆர்.ஆர்.நகர், தெற்கு வைத்தியநாதபுரம் கிராமத்தில் வீடும் உள்ளது. வாதிகள் எங்கள் மீது 24 அயிட்ட சொத்துக்கள் பெயரில் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கின் வாதிகள் என் உடன் பிறந்த சகோதரிகள். 12.04.1995 ம் ஆண்டு இந்த தாவா சொத்துக்களை பொறுத்து வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதாக நான் சொல்லும் போது அதற்கான ஆவணங்கள் எழுதிக்கொள்ளப்பட்டதா என்று கேட்டால் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது.

**<u>(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)</u>**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 25th day of August 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.